T.C. 114

**007/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS – PAPER IV (FUNDAMENTAL RULES, PENSION RULES AND OTHER APPLICABLE RULES AND CODES)

(Without Books)

Maximum Time : 1.30 hours　　　　Maximum Marks : 60

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 60 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
இவ்வினாத்தாள் 60 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Additional pay for holding full additional charge of one or more posts shall be allowed only if the period of additional charge exceeds

(A) 29 days (B) 39 days

(C) 49 days (D) 59 days

ஓர் அரசு அலுவலர் கூடுதல் பொறுப்புப்படி பெற வேண்டும் மெனில் குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு மேல் கூடுதல் பொறுப்பு பணியினை மேற்கொள்ள வேண்டும்

(A) 29 நாட்கள் (B) 39 நாட்கள்

(C) 49 நாட்கள் (D) 59 நாட்கள்

2. Deputation of a government servant out of India shall be sanctioned with the approval of

(A) Head of department (B) State government

(C) Central government (D) Drawing officer

வெளிநாட்டிற்கு வேற்றுப்பணிபுரிய அரசு பணியாளரை அனுப்ப வேண்டுமெனில் யாருடைய ஒப்புதல் பெறப்பட வேண்டும்

(A) துறைத் தலைவர் (B) மாநில அரசு

(C) மத்திய அரசு (D) பணம் எடுக்கும் அலுவலர்

3. The suspension of a government servant was revoked and the period treated as E.L. He applied for surrender of E.L. on the due date when he was suspension It can be entertained if received within

(A) 3 months of rejoining duty (B) 6 months of rejoining duty

(C) 1 months of rejoining duty (D) 2 months of rejoining duty

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியரின் தற்காலிக பணி நீக்க காலம் ஈட்டியவிடுப்பாக வரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர் பணி நீக்க காலத்தில் உள்ள உரிய நாளில் ஈட்டிய விடுப்பினை காசாக்க பணியல் சேர்ந்து எத்தனை நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்

(A) பணியில் சேர்ந்து 3 மாதத்திற்குள் (B) பணியில் சேர்ந்து 6 மாதத்திற்குள்

(C) பணியில் சேர்ந்து 1 மாதத்திற்குள் (D) பணியில் சேர்ந்து 2 மாதத்திற்குள்

4. A drawing officer deducted PLI premium from the subsistence allowance of an employee

(A) It is a compulsory deduction

(B) It is an optional deduction

(C) No deduction shall be made

(D) It is the discreation of the drawing officer

பணம் எடுக்கும் அலுவலர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டவரின் பிழைப்பூதிய படியல் பி.எல்.ஐ. தவணைத் தொகையினை பிடித்தம் செய்வது

(A) இது ஒரு கட்டாய கழித்தல்

(B) இது ஒரு விருப்பத் தேர்வு

(C) தவணைத் தொகை கழித்தல் கூடாது

(D) பணம் எடுக்கும் அலுவலரின் விருப்புரிமை

5. A drawing officer deducted IT from the subsistence allowance of an employee under suspension

(A) No deduction shall be made

(B) It is an optional

(C) It is compulsory

(D) Discreation of the drawing officer

தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்ட அரசுப் பணியாளருக்கு வழங்கப்படும் பிழைப்பூதிய படியில் பணம் எடுக்கும் அலுவலர் வருமான வரி பிடித்தம் செய்வது

(A) பிடித்தம் செய்யகூடாது

(B) விருப்படி பிடித்தம் செய்யலாம்

(C) கண்டிப்பாக பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(D) பணம் எடுக்கும் அலுவலரின் விருப்புரிமை

6. The three months notice period for voluntary retirement shall be reckoned from the date of receipt of notice by the

(A) Head of office

(B) Head of the department

(C) Appointing authority

(D) Government administrative department

தன்விருப்ப ஓய்வில் செல்ல உள்ள அரசு ஊழியரின் விண்ணப்பம் மூன்று மாத காலத்தை எந்த அலுவலகத்தில் பெறப்பட்ட நாளிலிருந்து கணக்கில் கொள்ள வேண்டும்

(A) அலுவலகத் தலைவர்

(B) துறைத் தலைவர்

(C) நியமன அதிகாரி

(D) தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட அரசு நிர்வாக துறை

7. The weightage admissible to an employee seeking voluntary retirement on completion of 28 years of service and 56 years of age is

(A) 1 year (B) 2 years

(C) 3 years (D) 4 years

தன் விருப்ப ஓய்வு கோரும் பணியாளர் 28 வருடமும் 56 வயது உடையவராக இருந்தால் அவருக்கு வெயிட்டேஜ் தரக்கூடிய காலம்

(A) 1 வருடம் (B) 2 வருடங்கள்

(C) 3 வருடங்கள் (D) 4 வருடங்கள்

8. A government servant claimed TA bill including special pay as pay and the controlling officer refused to entertain the claim

(A) Pay + GP alone can be considered

(B) All the three can be taken as pay

(C) It is the discretion of the controlling officer

(D) It is the discretion of the Head of Dept.

ஒரு அரசுப் பணியாளர் பயணப்படி கோரும் போது தான் பெற்று வந்த சிறப்பு ஊதியத்தினையும் சேர்த்து கோரியதினை கட்டுப்பாட்டு அலுவலர் மறுத்துள்ளார்

(A) ஊதியம் + தர ஊதியம் மட்டும் கணக்கிப்படும்

(B) ஊதியம் + தர ஊதியம் + சிறப்பு ஊதியம் ஊதியமாக கணக்கில் கொள்ளலாம்

(C) கட்டுப்பாடு அலுவலரின் விருப்புரிமை

(D) துறைத்தலைவரின் விருப்புரிமை

9. A head of office sanctioned special disability leave to an employee for an injury caused in consequence of performance of official duty

(A) Head of office is empowered to sanction

(B) District level officer is empowered to sanction

(C) Head of Department

(D) Govt alone can sanction

அரசுப் பணியிலிருந்த ஒரு பணியாளருக்கு அலுவலகப் பணி மேற் கொள்ளும் போது காயம் ஏற்பட்டதன் காரணமாக அலுவலகத் தலைவர் சிறப்பு இயலாமை விடுப்பு அனுமதித்தார்

(A) அலுவலகத் தலைவர்

(B) மாவட்ட அளவில் உள்ள அலுவலருக்கு அதிகாரம்

(C) துறைத் தலைவர்

(D) அரசு மட்டுமே அனுமதிக்கலாம்

10. The excess joining time availed by a government servant to rejoin duty on revocation of suspension was treated as earned leave

(A) It is in order

(B) It is not in order

(C) Can be treated as half pay leave only

(D) Can be treated as EOL only

தற்காலிக பணி நீக்கம் ரத்து செய்யப்பட்டு பணி அமர்த்தல் ஆணை வழங்கப்பட்ட பணியாளர் மீள பணியில் சேர்வதற்கு முன் அதிகமாக துய்த்த பணியேற்பு இடைக்காலம் ஈட்டியவிடுப்பாக முறைப்படுத்தப்பட்டது

(A) முறையாக உள்ளது

(B) முறையற்றதாக உள்ளது

(C) அரைச்சம்பள விடுப்பாக மட்டுமே முறைப்படுத்தலாம்

(D) ஊதியமற்ற விடுப்பாக மட்டுமே முறைப்படுத்தலாம்

11. The rate of income tax to be deducted under section 194 J in respect of a person who has PAN card is

(A) 10% (B) 20%

(C) 25% (D) 15%

வருமானவரிச் சட்டம் பிரிவு 194 J ன் படி பான்கார்டு வைத்துள்ளவர்களுக்கு பிடித்தம் செய்யப்பட வேண்டிய வருமான வரி

(A) 10% (B) 20%

(C) 25% (D) 15%

12. The ceiling on TA claims of touring officer of local fund Audit is

(A) 10% of Basic Pay (B) 12% of Basic Pay

(C) 15% of Basic Pay (D) 20% of Basic Pay

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை முகாம் செல்லும் அலுவலரின் பயணப்படியின் உச்ச வரம்பு

(A) 10% அடிப்படை சம்பளம் (B) 12% அடிப்படை சம்பளம்

(C) 15% அடிப்படை சம்பளம் (D) அடிப்படை சம்பளத்தில் 20%

13. An officer was on EOL without M.C. for 97 days. The E.L. to be deducted from his leave account is

(A) 9 days (B) 10 days

(C) 8 days (D) 12 days

ஓர் அரசு அலுவலர் 97 நாட்கள் மருத்துவச் சான்றில்லாத ஊதியமில்லா விடுப்பு துய்த்துள்ளார். அவருடைய ஈட்டிய விடுப்பு கணக்கில் எத்தனை நாட்கள் கழிக்கப்பட வேண்டும்

(A) 9 நாட்கள் (B) 10 நாட்கள்

(C) 8 நாட்கள் (D) 12 நாட்கள்

14. A government servant applied for permission to join correspondence course. Where no further details are required permission shall be granted with in ———— days from the date of receipt of application

(A) 30 days (B) 60 days

(C) 45 days (D) 15 days

அரசுப் பணியாளர் ஒருவர் அஞ்சல் வழி கல்வி மூலம் பயில விண்ணப்பம் செய்துள்ளார். அன்னாரிடமிருந்து வேறு விபரங்கள் ஏதும் தேவைப்படாத நிலையில் விண்ணப்பம் அளித்து எத்தனை நாட்களுக்குள் அனுமதி அளிக்கப்பட வேண்டும்

(A) 30 நாட்கள் (B) 60 நாட்கள்

(C) 45 நாட்கள் (D) 15 நாட்கள்

15. An officer retire on 31.7.2013 and eligible for pension of Rs. 19,500. Government ordered reduction of pension @ Rs. 1,500 p.m. for 2 years as a measure of punishment for charges framed. The amount to be taken for commutation of pension is

(A) 6000 (B) 6500
(C) 7000 (D) 7500

அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவருக்கு ஓய்வூதியம் ரூ. 19,500 கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் மேல் உள்ள குற்றச்சாட்டுக்கான தண்டனையாக மாதம் ரூ. 1,500 வீதம் இரண்டாண்டுகளுக்கு ஓய்வூதியம் குறைக்க அரசு ஆணையிட்டுள்ள நிலையில் ஓய்வூதிய தொகுத்து பெறுதல் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஓய்வூதியம்

(A) 6000 (B) 6500
(C) 7000 (D) 7500

16. The amount payable to a Govt. servant on completion of 25 years of unblemished service is

(A) Rs. 500 (B) Rs. 1,000
(C) Rs. 2,000 (D) Rs. 1,500

அரசுப் பணியில் 25 ஆண்டுகள் மாசற்ற பணி புரிந்த பணியாளருக்கு வழங்கக்கூடிய பரிசுத்தொகை

(A) ரூ. 500 (B) ரூ. 1,000
(C) ரூ. 2,000 (D) ரூ. 1,500

17. A govt. servant was missing for more than seven years and police certified this. His wife is eligible to get

(A) Family pension (B) DCRG
(C) Spl. provident fund (D) All the above

அரசு ஊழியர் ஒருவர் காணாமல் போய் ஏழாண்டுகள் கடந்து காவல் துறையினரும் சான்று அளித்த நிலையில் காணாமல் போனவருடைய மனைவிக்கு எந்த ஓய்வூதியப் பயன்களை அனுமதிக்கலாம்

(A) குடும்ப ஓய்வூதியம் (B) இறப்பு மற்றும் ஓய்வு காலபணிக்கொடை
(C) சிறப்பு சேமநலநிதி (D) மேற்கண்ட மூன்றும்

18. The audit officer empowered to certify pensionery benefits of a retiring employee of a university in Tamil Nadu is

(A) The Finance Officer
(B) The Director LF audit
(C) The Deputy director university audit
(D) The Accountant General Tamil Nadu

தமிழ்நாட்டில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் ஓய்வு பெறும் பணியாளர்க்கான பயன்களை சான்றிடும் அதிகாரம்

(A) நிதி அலுவலர்
(B) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் இயக்குநர்
(C) துணை இயக்குநர் பல்கலைகழகத் தணிக்கை
(D) தமிழ்நாடு மாநில கணக்காய்வுத் தலைவர்

19. An assistant in govt. department was selected by TNPSC and appointed as Asst. Inspector in L.F. Audit Department. He represented for fixation of pay under FR 22 (B)

(A) Eligible for fixation of pay under FR 22 (B)

(B) Pay may be fixed on par with the pay draw in dept to avoid loss

(C) His pay will start at the minimum of the time scale admissible to such post

(D) Head of the department decision is final

ஒரு அரசுத் துறையில் உதவியாளராகப் பணியாற்றும் பணியாளர் ஒருவர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளராக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளார். அவர் அடிப்படை விதி 22 (B) யின் கீழ் தன்னுடைய ஊதியத்தின் நிர்ணயம் செய்ய கோரியுள்ளார்

(A) அவி. 22 B யின் ஊதியம் நிர்ணயம் செய்யலாம்

(B) வேறு துறையில் பெற்ற ஊதியத்திற்கு இணையாக இழப்பு இல்லாமல் ஊதியம் நிர்ணயம் செய்யலாம்

(C) புதிய பதவியல் குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

(D) துறைத்தலைவர் முடிவே இறுதியானது

20. The LTC TA bill should be submitted with in ———— from the date of completion of journey

(A) Three months (B) Two months

(C) One months (D) 15 days

விடுப்பு கால பயணச் சலுகை பட்டியல் பயணம் முடிந்த நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

(A) மூன்று மாதங்கள் (B) இரண்டு மாதங்கள்

(C) ஒரு மாதம் (D) 15 நாட்கள்

21. A joint director of LF Audit travelled by rail to Madurai for inspection of AD office. State his eligibility of travel

(A) Eligible for First Class

(B) Eligible for II A/c

(C) Eligible for IIIrd A/c

(D) Eligible for all the above

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் பணியாற்றும் இணை இயக்குநர் மதுரை உதவி இயக்குநர் அலுவலகத்தினை ஆய்வு செய்ய தொடர்வண்டி மூலம் எந்த வகுப்பில் பயணம் செய்யலாம்

(A) முதல் வகுப்பு

(B) இரண்டாம் வகுப்பு குளிர்சாதனப்பெட்டி

(C) மூன்றாம் வகுப்பு குளிர்சாதனப்பெட்டி

(D) மேலே உள்ள அனைத்தும் வகுப்புகளும்

22. An office assistant who has put in 4 years of service is eligible for UEL on MC

(A) 60 days (B) 50 days

(C) 40 days (D) 30 days

நான்கு வருடம் பணி முடித்துள்ள ஓர் அலுவலக உதவியாளர் ———— நாட்கள் மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு துய்த்துக் கொள்ளலாம்

(A) 60 நாட்கள் (B) 50 நாட்கள்

(C) 40 நாட்கள் (D) 30 நாட்கள்

23. Unearn leave on private affairs for 40 days was sanctioned to an office assistant with 12 years of service

(A) Eligible on completion of probation

(B) Eligible on completion of 10 years of service

(C) Eligible on completion of 15 years of service

(D) Eligible on completion of 20 years of service

12 ஆண்டுகள் பணிக்காலம் முடித்துள்ள ஒரு அலுவலக உதவியாளருக்கு 40 நாட்கள் சொந்த காரணங்களுக்கான ஈட்டி விடுப்பு துய்க்க அனுமதிக்கப்பட்டது

(A) தகுதி காண் பருவம் முடித்திருக்க வேண்டும்

(B) 10 ஆண்டுகள் பணிக்காலம் முடித்திருக்க வேண்டும்

(C) 15 ஆண்டுகள் பணிக்காலம் முடித்திருக்க வேண்டும்

(D) 20 ஆண்டுகள் பணிக்காலம் முடித்திருக்க வேண்டும்

24. A Govt servant was transferred from station A to station B. He entered on leave without joining the new station. The leave salary is payable to him by

(A) Station A

(B) Station B

(C) Either (A) or (B)

(D) Transit pay will be paid by station A

அரசுப் பணியில் உள்ள ஒருவர் A இடத்திலிருந்து B இடத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டு புதிய இடத்தில் அவர் பணியில் சேராமல் விடுப்பில் சென்றார். அவருக்கு விடுப்பு கால ஊதியம் எந்த இடத்திலிருந்து வழங்கப்பட வேண்டும்

(A) A இடத்திலிருந்து

(B) B இடத்திலிருந்து

(C) A அல்லது B இடத்திலிருந்து

(D) இடைமாறுபாட்டு கால சம்பளம் A இடத்திலிருந்து வழங்கப்பட வேண்டும்

25. A govt servant applied for vehicle advance to purchase a 5 year Old Car. It was rejected by the competent authority because

(A) Vehicle advance can be sanctioned for purchase of new car only

(B) For 4 year old car only

(C) For 3 year old car only

(D) For 1 year old car only

அரசு ஊழியர் ஒருவர் 5 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பழைய நான்கு சக்கர வாகனத்தினை வாங்க வாகன முன்பணம் பெற விண்ணபித்துள்ளார். அவருடைய விண்ணப்பம் ஒப்பளிக்கத் தகுதி பெற்ற அதிகாரியால் நிராகரிக்கப்பட்டது. ஏனென்றால்

(A) புதிய வாகனம் வாங்க மட்டுமே வாகன முன் பணம் கோரலாம்

(B) 4 வருட பயன்படுத்தப்பட்ட வாகனம் வாங்க மட்டுமே முன் பணம் கோரலாம்

(C) மூன்றாண்டுகள் ஆன வாகனம் வாங்க மட்டுமே முன்பணம் கோரலாம்

(D) ஓர் ஆண்டு ஆன வாகனம் வாங்க மட்டுமே முன்பணம் கோரலாம்

26. Deduction of rent from the pay of an office supt. drawing pay of Rs. 22,500 for occupying govt quarters is at the rate of

(A) 4% for grade I (a) and grade I (b) places

(B) 3% for grade II places

(C) 2% for grade III places

(D) 4% for all the above places

ரூ. 22,500 ஊதியமாக பெறும் அலுவலக கண்காணிப்பாளர் ஒருவர் அரசுக் குடியிருப்பில் குடியிருப்பதற்காக வாடகையாக ———————— அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(A) 4% தரம் I (a) மற்றும் தரம் I (b) இடத்தில் குடியிருப்பவர்களுக்கு

(B) 3% தரம் II இடத்தில் குடியிருப்பவர்களுக்கு

(C) 2% தரம் III இடத்தில் குடியிருப்பவர்களுக்கு

(D) 4% மேற்கண்ட அனைத்து இடங்களிலும் குடியிருப்பவர்களுக்கு

27. Lapse of DCRG to government in respect of an employee retired but expired before receiving DCRG will arise

(A) He leaves behind no family

(B) Has made no nomination

(C) Nominee subsists

(D) Any of the above

ஓய்வு பெற்ற அரசுப்பணியாளர் ஒருவர் இ.ம. ஞ.சா பணிக் கொடை பெறுவதற்கு முன் இறக்க நேரிட்டால் அத்தொகையை அரசுக் கணக்கில் சேர்க்கும் நிகழ்வு

(A) குடும்ப உறுப்பினர் எவரும் இல்லையெனில்

(B) நியமன படிவம் ஏதும் அளிக்காத நிலையில்

(C) நியமனதாரருக்கு தகுதியில்லையெனில்

(D) மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒன்று

28. The maximum pension admissible to an employee as per TNRPSR 2009 is

(A) Rs. 36,500 (B) Rs. 37,500

(C) Rs. 38,500 (D) Rs. 39,500

தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 2009 ன் படி அனுமதிக்கத்தக்க அதிகபட்ச ஓய்வூதியம்

(A) ரூ. 36,500 (B) ரூ. 37,500

(C) ரூ. 38,500 (D) ரூ. 39,500

29. The maximum family pension admissible as per Tamil Nadu revised pay scale rules 2009 is

(A) Rs. 20,100 (B) Rs. 21,000

(C) Rs. 22,100 (D) Rs. 23,100

தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 2009 ன் படி அனுமதிக்கத்தக்க அதிகபட்ச குடும்ப ஓய்வூதியம்

(A) ரூ. 20,100 (B) ரூ. 21,000

(C) ரூ. 22,100 (D) ரூ. 23,100

30. A drawing officer deducted the dues to co-op credit society from the DCRG of a retired government servant

(A) Can't be deducted

(B) Can be deducted with the consent of the retiree

(C) Can be deducted with out the consent of the retiree

(D) Approval of HOD to be obtained for deduction of dues

பணம் எடுக்கும் அலுவலர் ஓய்வு பெற்ற பணியாளரின் இறப்பு மற்றும் ஓய்வு கால பணிக் கொடையிலிருந்து கூட்டுறவுகடன் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகையினை பிடித்தம் செய்வது

(A) பிடித்தம் செய்ய இயலாது

(B) ஓய்வு பெற்றவரின் அனுமதியுடன் பிடித்தம் செய்ய இயலாது

(C) ஓய்வு பெற்றவரின் அனுமதியுடன் பிடித்தம் செய்யலாம்

(D) துறைத் தலைவரின் ஒப்புதலுடன் பிடித்தம் செய்யப்படலாம்

31. A pensioner died having only one son who was physically crippled family pension was sanctioned and continued to be paid beyond the age of 25 years

(A) Can be paid up to 30 years (B) Can be paid up to 35 years

(C) Can be paid up to 45 years (D) Can be paid till life time

ஓய்வு பெற்ற பணியாளரின் வாரிசுதாரரான அவருடைய மகன் ஊனமுற்றவர் என்பதால் அவருக்கு அனுமதிக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 25 வயது பூர்த்தியடைந்த பின்னரும் வழங்கப்பட்டு வருவது

(A) 30 வயது வரை வழங்கப்படலாம் (B) 35 வயது வரை வழங்கப்படலாம்

(C) 45 வயது வரை வழங்கப்படலாம் (D) வாழ்நாள் முழுவதும் வழங்கப்படலாம்

32. Earnest money deposit made by a tendered belongs to which kind of deposit?

(A) Personal deposit
(B) Public works deposit
(C) Revenue deposit
(D) Civil court's deposit

ஒப்பந்தாரரிடமிருந்து பெறப்படும் பொறுப்புறுதி வைப்புத் தொகை என்பது எந்த விதமான வைப்புத் தொகை

(A) பதவிப்பெயர் வைப்புத்தொகை
(B) பொதுப்பணிகள் வைப்புத்தொகை
(C) வருவாய் வைப்புத்தொகை
(D) உரிமைஇயல் நீதிமன்ற வைப்புத்தொகை

33. Working capital means

(A) The difference between long term loans and short term loans
(B) The capital required for staff working
(C) The difference between current assets and current liabilities
(D) Equal to pending realisation of sale proceeds

நடைமுறை மூலதனம் என்பது

(A) நீண்ட கால கடனுக்கும் குறுகிய கால கடனுக்கும் உள்ள வித்தியாசம்
(B) பணியாளர் பணி புரிவதற்கு தேவைப்படும் முதல்
(C) நடப்பு உடைமைகளுக்கும் நடப்பு கடன் பொறுப்புகளுக்கும் உள்ள வித்தியாசம்
(D) விற்பனை செய்யப்பட்ட வசூலாகாமல் நிலுவையில் உள்ள தொகை

34. State the minimum service required in a financial year for issuing uniform for an office assistant due to retire

(A) One month
(B) 3 months
(C) 6 months
(D) 4 months

ஓய்வுபெற உள்ள அலுவலக உதவியாளருக்கு சீருடை பெற குறைந்தபட்சம் ———— மாதங்கள் பணி காலம் நிதியாண்டில் இருக்க வேண்டும்

(A) 1 மாதம்
(B) 3 மாதங்கள்
(C) 6 மாதங்கள்
(D) 4 மாதங்கள்

35. A govt servant availed 4 days of CL and 4 days of holidays in camp. He was paid TA for both onward and return journeys as claimed by him

(A) TA for return journey is not eligible since CL + holidays availed exceeds 7 days
(B) He is eligible to get TA both ways
(C) It is the discreation of the controlling officer
(D) None of the above

ஒரு அரசு ஊழியர் முகாமின் போது 4 நாட்கள் தற்செயல் விடுப்பும் நான்கு நாட்கள் விடுமுறை நாட்களும் துய்த்துள்ளார். அவர் முகாமிற்கு செல்வதற்கும் திரும்ப வருவதற்கும் பயணப்படி கோரியுள்ளார்

(A) திரும்புவதற்கு பயணப்படி அனுமதிக்ககூடாது ஏனென்றல் அவர் தற்செயல் விடுப்பும், விடுமுறை நாட்களும் 7 நாட்களுக்கு மிகையாக துய்த்துள்ளார்
(B) இரண்டுக்கும் பயணப்படி அனுமதிக்காலம்
(C) கட்டுப்பாட்டு அலுவலரின் விருப்புரிமை
(D) மேற்கண்டவைகள் எதுவுமில்லை

36. 100% rise in special pay for typists with monetary benefit from 1.4.2013 was ordered to those joined duty prior to

(A) 1-10-1998 (B) 1-11-1998

(C) 1-9-1998 (D) 1-8-1998

அரசுப் பணியில் தட்டச்சராக பணியாற்றும் பணியாளர்களுக்கு 1.4.2013 முதல் 100% சிறப்பு ஊதியம் உயர்வு செய்து வரப் பெற்ற ஆணையின் படி ———— தேதிக்கு முன்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு மட்டும் வழங்க அனுமதிக்கப்பட்டது

(A) 1-10-1998 (B) 1-11-1998

(C) 1-9-1998 (D) 1-8-1998

37. The government ordered revision of scale of pay of Tutor /Demonstrators w.e.f 1.1.2006 in G.O.MS No. 2/Higher Edn. Dept. / Dt 4.1.2012. The arrears from 1.1.2007 should be paid in

(A) 4 installments (B) 3 installments

(C) 2 installments (D) 1 installments

1.1.2006 திருத்திய ஊதிய நிர்ணயத்தின் படி அரசாணை எண் 2/ உயர்கல்வித்துறை /நாள் 4–1–2012 ல் ஆணையிட்டவாறு பயிற்றாசிரியர்/ செயல்முறைப் பயிற்றாசிரியர்களுக்கு 1.1.2007 முதல் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ———— தவணைகளாக வழங்கப்பட வேண்டும்

(A) 4 தவணைகள் (B) 3 தவணைகள்

(C) 2 தவணைகள் (D) 1 தவணை

38. Period of suspension shall be ———— for the purpose of Adhoc/Special Bonus for the year 2010-11

(A) Included (B) Excluded

(C) 50% included (D) 50% Excluded

2010–11 ஆண்டுகளுக்கான அட்ஹாக்/சிறப்பு போனஸ் வழங்க தற்காலிக பணி நீக்க காலத்தினை

(A) சேர்க்கலாம் (B) விலக்கலாம்

(C) 50% சேர்க்கலாம் (D) 50% விலக்கலாம்

39. A person drawing freedom fighters pension was paid Pongal prize amount of Rs. 500 in January 2012 as per G.O. No. 2/Fin/Dept Dt. 2.1.2012

(A) The G.O is not applicable to freedom fighter pensioners

(B) Application to freedom fighter pensioners

(C) 50% amount is to be paid

(D) 75% amount is to be paid

சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பெறும் ஒருவருக்கு அரசு ஆணை எண் 2/நிதி/துறை நாள் 2–1–2012 ன் பொங்கல் பரிசு அனுமதிக்கப்பட்டது

(A) அரசாணை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு பொருந்தாது

(B) சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு பொருந்தும்

(C) 50% தொகையினை வழங்கலாம்

(D) 75% தொகையினை வழங்கலாம்

40. The grade of an employee drawing Rs. 8,700 Grade pay for TA purpose is

(A) II
(B) III
(C) I
(D) IV

தர ஊதியம் ரூ. 8,700 பெறும் அரசு அலுவலரின் பயணப் படி பெறுவதற்குரிய தரம்

(A) II
(B) III
(C) I
(D) IV

41. A grade I officer is transferred to a station of a distance of 100 kms from the existing station the lump sum grant eligible is

(A) Rs. 1,200
(B) Rs. 900
(C) Rs. 1,425
(D) Rs. 1,800

தரம் I அரசு அலுவலர் 100 கி.மி தூரத்திற்கு பணி மாறுதலில் செல்லும் போது அவருக்கு ரூ. ———— ஒட்டு மொத்த மானியமாக பெற தகுதியுள்ளது

(A) ரூ. 1,200
(B) ரூ. 900
(C) ரூ. 1,425
(D) ரூ. 1,800

42. Which of the following do not court for increment?

(A) EOL with MC
(B) UEL with MC
(C) EL without MC
(D) EOL without MC

கீழ்க்கண்டவைகளில் வருடாந்தர ஊதிய உயர்வுக்கு சேர்க்கப்படாத காலம்

(A) மருத்துவ சான்றுடன் கூடிய ஊதியமில்லா விடுப்பு
(B) மருத்துவ சான்றுடன் கூடிய ஈட்டா விடுப்பு
(C) மருத்துவச் சான்றில்லாத ஈட்டிய விடுப்பு
(D) மருத்துவச் சான்றில்லாத ஊதியமில்லா விடுப்பு

43. The amount to be deducted from the salary of the employees under contributory pension scheme of Tamil Nadu government is

(A) 12% of pay + DA
(B) 12% of pay
(C) 10% of pay + DA
(D) 10% of pay

தமிழ்நாடு அரசின் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்ய வேண்டிய பங்களிப்பு ஓய்வூதியத் தொகை

(A) ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 12%
(B) ஊதியத்தில் 12%
(C) ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10%
(D) ஊதியத்தில் 10%

44. Sanction for a provident fund advance will remain operative for a period of

(A) 1 year (B) 6 months

(C) 3 months (D) 1 month

பொது வருங்கால வைப்பு நிதியில் முன்பணம் பெற அனுமதிக்கப்பட்டது ———— காலம் வரை நடைமுறையில் இருக்கும்

(A) 1 வருடம் (B) 6 மாதங்கள்

(C) 3 மாதங்கள் (D) 1 மாதம்

45. Consolidated fund account of the state means the fund into which

(A) The revenues are credited

(B) Loans or ways and means advances are credited

(C) Repayment of previous loans received are credited

(D) All the above

மாநில அரசுத் தொகுதி நிதி கணக்கு என்பது

(A) வருவாயைவரவாக கொள்வது

(B) கடன் அல்லது வழிவகை முன்பணங்களை வரவாக கொள்வது

(C) முந்தைய கடன் தொகை திரும்ப பெற்றதினை வரவாகக் கொள்வது

(D) மேலே உள்ள அனைத்தும்

46. Which advance is interest free advance to a permanent government servant

(A) Festival advance (B) Marriage advance

(C) Computer advance (D) House building advance

கீழ்க்கண்டவற்றில் அரசு ஊழியர் வட்டியில்லா முன் பணமாக பெறுவது

(A) பண்டிகை முன்பணம் (B) திருமண முன்பணம்

(C) கணினி முன்பணம் (D) வீடுகட்ட முன்பணம்

47. The approval or sanction to a capital work will lapse after ———— years if the work has not been started

(A) The end of the financial year

(B) 2 years from the date of sanction

(C) 3 years

(D) Five years

ஒப்புதல் அளிக்கப்பட்ட மூலதன வேலைக்கான அனுமதி ஆணை ———— வருடத்திற்குள் பணி துவங்கா விட்டால் காலங் கடந்தவையாக கருதப்படும்

(A) நிதியாண்டின் இறுதியில்

(B) ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள்

(C) ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள்

(D) ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள்

48. Claims for reimbursement of medical expenses shall be subjected to a discount of 15% if preferred after ———— months from the date of purchase of medicines

(A) 1 year (B) 2 year

(C) 6 months (D) 3 months

மருந்து வாங்கிய நாளிலிருந்து ———— காலத்திற்குப் பின் பட்டியலினை சமர்ப்பித்து செலவுத்தொகை மீள பெற கோரும் தொகையிலிருந்து 15% தள்ளுபடியுடன் தொகை அனுமதிக்கலாம்

(A) 1 வருடம் (B) 2 வருடம்

(C) 6 மாதங்கள் (D) 3 மாதங்கள்

49. No claim for T.A. will be entertained if it is made after ———— months from the date on which the claim has fallen due

(A) One month (B) Three months

(C) Six months (D) Twelve months

பயணம் முடிவடைந்த நாளிலிருந்து ———— காலத்திற்குள் பயணப்படி கோரவில்லையெனில் அனுமதிக்க இயலாது

(A) 1 மாதம் (B) 3 மாதங்கள்

(C) 6 மாதங்கள் (D) 12 மாதங்கள்

50. The period of limitation for arrear claims is normally three years from the date on which the amount claimed first became due for payment

(A) Pay and allowance including leave salary

(B) Pension

(C) T.A

(D) All the above

பொதுவாக நிலுவைத் தொகையினை பெற மூன்றாண்டுகள் என்ற கால வரையறை எந்த தொகை பெற வேண்டிய நாளிலிருந்து மூன்றாண்டுகள் என எடுத்துக்கொள்ளலாம்

(A) ஊதியம் மற்றும் படிகள் விடுப்பு ஊதியம் உட்பட்ட

(B) ஓய்வூதியம்

(C) பயணப்படி

(D) அனைத்தும்

51. A government servant was paid advance for tour in may 2017 and without submitting T.A. bill for may 2017 he again applied for tour advance in June 17

(A) Advance may be paid for June 17

(B) Advance may be paid fill two advances are pending and claims yet to be received

(C) Advance may be paid fill three advances are pending and claims yet to be received

(D) Second advance shall not be granted until an account has been given for the previous advance

அரசுப் பணியாளருக்கு மே 2017 ல் பயணம் மேற் கொள்ள முன்பணம் வழங்கப்பட்டு அதற்குண்டான பயணப்படி பட்டியல் சமர்ப்பிக்காமல் ஜூன் 2017 ப் பயணம் மேற்கொள்ள முன் பணம் கோரி விண்ணப்பம் செய்துள்ளார்

(A) ஜூன் 2017 க்கு பயணம் மேற்கொள்ள பயணப்படி வழங்காலம்

(B) இரண்டு பயணப்படி முன்பணங்கள் நிலுவையில் இருந்தாலும் பயணப் படி வழங்கலாம்

(C) மூன்று பயணப்படி முன்பணங்கள் நிலுவையில் இருந்தாலும் பயணப் படி வழங்கலாம்

(D) முன்னர் பெற்ற பயணப்படி முன் பணம் சரிசெய்யப்படாமல் இரண்டாவது பயணப்படி முன்பணம் வழங்க இயலாது

52. Interruption in service is

(A) The break in service which will affect pension because the break will entail forfeiture of past service if not condoned

(B) Period of EOL without medical certificate

(C) EOL with medical certificate

(D) Period of suspension regulated as E.L.

பணியிடை முறிவு என்பது

(A) பணியிடை முறிவு ஒய்வூதியத்தினை பாதிக்கும் ஏனென்றால் பணியிடை முறிவு காலத்தினை ஆணை பெறப்படவில்லையெனில் பொருட்படுத்தாது விடல்

(B) மருத்துவ சான்றில்லாத அசாதாரண விடுப்பு

(C) மருத்துவச் சான்றுடன் கூடிய அசாதாரண விடுப்பு

(D) தற்காலிக பணி நீக்க காலம் ஈட்டிய விடுப்பாக வரன்முறைப்படுத்தப்பட்டது

53. Banking treasury means

(A) The treasury where transactions are conducted through SBI/RBI

(B) The treasury which makes payments after passing the bills

(C) The treasury which does local body institution transactions

(D) The treasury which does only government transactions

வங்கி கருவூலம் என்பது

(A) கருவூல நடவடிக்கைகள் எஸ்பிஐ/ரிசர்வ் வங்கி மூலமாக மேற்கொள்ளும் கருவூலம்

(B) கருவூலகத்திலேயே பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு தொகை வழங்குதல்

(C) உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளை பேணும் கருவூலம்

(D) அரசு நடவடிக்கைகள் மட்டும் மேற்கொள்ளும் கருவூலம்

54. Part I estimate is the estimate which is prepared based on
(A) To prepare a new expenditure or revenue in the coming financial year
(B) Disbanding the existing revenue in the coming financial year
(C) Disbanding the existing expenditure in the coming financial year
(D) The standing sanctions existing orders and laws

பகுதி I மதிப்பீடு தயாரிக்கும் போது இதன் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது
(A) வரும் நிதியாண்டிற்கான புதிய செலவினங்கள் அல்லது வரவினங்கள்
(B) வரும் நிதியாண்டில் கலைத்து விட வேண்டிய நடைமுறையில் உள்ள வரவினங்கள்
(C) வரும் நிதியாண்டில் கலைத்து விட வேண்டிய நடைமுறையில் உள்ள செலவினங்கள்
(D) நடைமுறையில் உள்ள ஆணைகளுக்கும் சட்டத்திற்கும் உள்ள நிலையான அனுமதி

55. Limited tender is a system of tender adopted whenever the estimated value of the order is upto ———— lakhs when the demand is very urgent
(A) Rs. 1. 5 lakh (B) Rs. 2 lakh
(C) Rs. 5 lakhs (D) Rs. 3.5 lakhs

குறிப்பிட்ட வேலை மிகவும் அவசரம் என கருதும் போது வரையறுக்கப்பட்ட ஒப்பந்த புள்ளி பின்பற்றப்படலாம். வரையறுக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி ———— வரை மதிப்புள்ள வேலைகளுக்கு பின்பற்றலாம்
(A) ரூ. 1.5 இலட்சம் (B) ரூ. 2 இலட்சம்
(C) ரூ. 5 இலட்சம் (D) ரூ. 3.5 இலட்சம்

56. UEL on private affairs can be granted to a govt employee with 8 years of service for ———— days at a time
(A) 90 days (B) 120 days
(C) 150 days (D) 180 days

எட்டு ஆண்டுகள் பணி முடித்த அரசு ஊழியருக்கு ஒரே நேரத்தில் ———— நாட்கள் சொந்த காரணங்களுக்கான ஈட்டாவிடுப்பு அனுமதிக்கலாம்
(A) 90 நாட்கள் (B) 120 நாட்கள்
(C) 150 நாட்கள் (D) 180 நாட்கள்

57. LPC is a certificate issued a drawing officer when a
(A) Self drawing officer is transferred
(B) Non self drawing officer is transferred
(C) Self drawing officer is transferred with in the district
(D) Self drawing officer is transferred out side the district

பணம் வழங்கும் அலுவலர் வழங்கும் முன் ஊதியச் சான்றிதழ் யாருக்கு வழங்குவது
(A) தானே பணம் பெறும் அலுவலர் மாறுதலில் செல்லும் போது
(B) தானே பணம் பெறாத அலுவலர் மாறுதலில் செல்லும் போது
(C) தானே பணம் பெறும் அலுவலர் ஒரே மாவட்டத்தில் மாறுதலில் செல்லும் போது
(D) தானே பணம் பெறும் அலுவலர் வெளி மாவட்டத்திற்கு மாறுதலில் செல்லும் போது

58. Treasury bill book generally means

(A) Bill book maintained in treasury

(B) Temporary receipt issued by stamping inspector of labour dept

(C) TNTC 70

(D) Bill book used in the agricultural extension centure

கருவூலக பட்டி புத்தகம் என்பது பொதுவாக

(A) கருவூலகத்தில் பராமரிக்கப்படும் கருவூலகப்பட்டி

(B) தற்காலிக பற்றுச்சீட்டு –தொழிலாளர் துறை ஸ்டாம்ப் ஆய்வாளரால் வழங்கப்படுவது

(C) டிஎன்டிசி 70

(D) விவசாய விரிவாக்க மையத்தில் பயன்படுத்தப்படும் பட்டியல் புத்தகம்

59. Compensation pension means Pension sanctioned to an officer

(A) Removed from service

(B) Dismissed from service

(C) Who is discharged from service due to abolition of a post

(D) Compulsorily retired

ஒரு அலுவலருக்கு வழங்கப்படும் இழப்பீட்டு ஓய்வூதியம் என்பது

(A) பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்

(B) பணியறவு செய்யப்பட்டவர்

(C) பணியிடத்தினை ஒழித்ததினால் பணியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டவர்

(D) கட்டாய ஓய்வு

60. The drawl of addl. charge allowance beyond 5 months was ordered in G.O. M.S. NO ——— of P (FRIV) dept of 3-10-2011

(A) 122 (B) 212

(C) 222 (D) 132

கூடுதல் பொறுப்புப்படி 5 மாதங்களுக்கு மேற்கொண்டும் வழங்கப்படலாம் என எந்த அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை எண் ——— பநி & சீ (எப்ஆர் IV) துறை நாள் 3–10–2011

(A) 122 (B) 212

(C) 222 (D) 132

## ROUGH WORK

**007/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS – PAPER IV (FUNDAMENTAL RULES, PENSION RULES AND OTHER APPLICABLE RULES AND CODES)

(With Books)

Maximum Time : 1 Hour | Maximum Marks : 40

## ***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Write the answer for any EIGHT of the following questions.**

கீழ்க்காணும் வினாக்களின் ஏதேனும் எட்டு கேள்விகளுக்கு மட்டும் பதில் அளிக்கவும். (8 × 5 = 4●

1. List out the conditions to be fulfilled to consider the claims of Junior getting more pay than senior.

   அரசு பணியில் மூத்தவரை விட இளையவர் கூடுதலாக ஊதியம் பெறும் நிலை எழுகையில் இளையவருக்கு இணையாக மூத்தவர் ஊதியம் நிர்ணயம் செய்ய என்னென்ன நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

2. What are the conditions to be satisfied before accepting the voluntary retirement notice given by a Government Servant?

   அரசு ஊழியர் தன் விருப்ப ஓய்வு செல்ல விண்ணப்பிக்கும் போது அன்னாரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க என்னென்ன நிபந்தனைகள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. A Govt servant drawing a pay of Rs. 19,300/- as on 1.4.2012 in the pay band of Rs. 9300 – 34,800 + GP 4600 is promoted to higher post in the pay band of Rs. 9300 – 34800 + GP 4800 – and he joined in the higher post on 25.2.13. He opted for fixation of pay under FR 22(1)(a)(i) initially and then under FR 22(B) after getting increment in the lower post fix his pay under FR 22(1)(a)(i) and FR 22(B).

   ஒரு அரசு ஊழியர் 1.4.2012 ல் ரூ. 9300 – 34,800 + 4600 த.ஊ என்ற ஊதியக்கட்டில் ரூ. 19,300/-ஊதியம் பெற்று வரும் நிலையில் 25.2.2013–ல் பதவி உயர்வு பெற்ற போது ரூ. 9300 – 34800 + 4800 த.ஊ ஊதியகட்டில் மேற்கண்ட தேதியில் பதவி உயர்வில் பணி சேர்கிறார். பதவி உயர்வில் அடிப்படை விதி 22(1)(a)(i) ல் முதலில் ஊதியம் நிர்ணயம் செய்யவும் பின்பு அ.வி. 22(B) ன் படி கீழ் பதவியல் ஒரு வருடாந்தர ஊதிய உயர்வு பெற்றபின் நிர்ணயம் செய்யவும் விருப்பம் தெரிவித்துள்ளவாறு ஊதியம் நிர்ணயம் செய்யவும்.

4. Work out the net qualifying service of a Govt servant retired on superannuation with the following details.

| | |
|---|---|
| DOB | 10.6.55 |
| DOJ duty | 20.7.81 |
| UEL on MC | 5.8.92 to 13.9.92 |
| EOL on MC | 18.7.94 to 17.8.94 |
| EOL without MC | 1.9.94 to 10.10.94 |

   Suspension period treated as E.L. 2 months

   Suspension period punishment 4 months

   Suspension period treated as duty 5 months.

கீழ்க்கண்ட விவரங்களை கொண்டு வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற அரசுப்பணியாளரின் தகுதிப் பணிக்காலத்தினை கணக்கிடுக.

| | |
|---|---|
| பணியாளர் பிறந்த நாள் | 10.6.55 |
| பணியில் சேர்ந்த நாள் | 20.7.81 |
| மருத்துவ சான்றின் அடிப்படையில் ஈட்டா விடுப்பு | 5.8.92 முதல் 13.9.92 வரை |
| மருத்துவ சான்றின் அடிப்படையில் ஊதியமில்லா விடுப்பு | 18.7.94 முதல் 17.8.94 வரை |
| மருத்துவ சான்றில்லாத ஊதியமில்லா விடுப்பு | 1.9.94 முதல் 10.10.94 வரை |

தற்காலிக பணிநீக்க காலம் ஈட்டிய விடுப்பாக வரன்முறைப்படுத்தியது 2 மாதங்கள்

தற்காலிக பணிநீக்க காலம் தண்டணை காலமாக வரன்முறைப்படுத்தியது 4 மாதங்கள்

தற்காலிக பணிநீக்க காலம் பணிக்காலமாக வரன்முறைப்படுத்தப்பட்டது 5 மாதங்கள்

5. Work out the pensionery benefits of an officer retired on 31.7.13 with the following details :

Net qualifying service 31 years 6 months

Pay last drawn Rs. 27500 + 7600 GP

in the pay band Rs. 15600 – 39100 + GP 7600

DA as on 1.7.2013 – 90%

Net qualifying service 63 Half Years

கீழ்க்கண்ட விவரங்களை கொண்டு 31.7.2013 ல் ஓய்வு பெற்ற ஒரு அரசு அலுவலரின் ஓய்வூதியப் பயன்களை கணக்கிடுக.

நிகர தகுதி பணிக்காலம் 31 வருடங்கள் 6 மாதங்கள்

கடைசியாக பெற்ற ஊதியம் ரூ. 27500 + 7600 தர ஊதியம்

ரூ. 15600 – 39100 + 7600 (த.ஊ) ஊதியகட்டில்

1.7.2013 ல் அகவிலைப்படி – 90%

நிகர தகுதி பணிகால அரையாண்டுகள் – 63.

6. Write short notes on Revenue Account and Capital Account

கீழ்க்கண்ட இரண்டினைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

(அ) வருவாய் கணக்கு

(ஆ) முதலீட்டுக் கணக்கு

7. Define the following :

(a) General services

(b) Social and community services

(c) Economic services

(d) Grants in aid and contributions.

கீழ்கண்டவைகளை விளக்குக.

(அ) பொதுப்பணிகள்

(ஆ) சமுதாயப் பணிகள்

(இ) பொருளாதாரப் பணிகள்

(ஈ) மானியங்கள் மற்றும் பங்குத் தொகைகள்.

8. State the five important audit checks on purchase of stores.

பொருட்கள் கொள்முதல் செய்வதில் தணிக்கையில் சரிபார்க்க வேண்டிய ஐந்து முக்கிய இனங்களை குறிப்பிடுக.

9. Write short notes on the following :

(a) Performance budget

(b) Cash credit accommodation.

சிறப்பு குறிப்பு வரைக.

(அ) செயலாக்க வரவு செலவு அறிக்கை

(ஆ) இசைவின் பேரிலான ரொக்கப்பற்று

10. Work out the TA of a DY Director who went on camp to Coimbatore with the following details :

12.5.2013/22.15 Chennai to Coimbatore A/c First Class 500 km. 13.5.2013/6.15

13.5.2013 Halted at Coimbatore

14.5.2013/21.15 Comibatore to Chennai A/c Second class 500 km 15.5.2013/5.15

19.5.2013/6.00 – 10.00 Chennai to Cuddalore by bus 192 km

18.00 – 22.00 Cuddalore – Chennai by bus

Pay – Rs. 26,200 + 6600 GP

First Class A/c fare Rs. 1100/-

Second Class A/c fare Rs. 950/-

Bus fare Rs. 80/-

Terminal charges : Eligible

கீழ்க்காணும் விவரங்களை கொண்டு கோயம்பத்தூருக்கு அலுவலக பயணம் மேற்கண்ட துணை இயக்குநரது பயணப்படியினை கணக்கிடவும்

12.5.2013/22.15 சென்னையிலிருந்து கோவை முதல் வகுப்பு குளிர்சாதனபெட்டி 500 கி.மி. 13.5.2013/6.15 கோவை சேர்தல்

13.5.2013 கோவையில் தங்கல்

14.5.2013/கோவையிலிருந்து சென்னை இரண்டாம் வகுப்பு குளிர்சாதனபெட்டி 500 கி.மி 15.5.2013/5.15 சென்னை சேர்தல்

19.5.2013/6.00 – 10.00 சென்னையிலிருந்து கடலூர் பேருந்து மூலம் 192 கி.மி

18.00 – 22.00 கடலூரிலிருந்து – சென்னை பேருந்து மூலம் 192 கி.மி.

ஊதியம் – ரூ. 26,200 + 6600 தர ஊதியம்

முதல் வகுப்பு குளிர்சாதன பெட்டி கட்டணம் ரூ. 1100/-

இரண்டாம் வகுப்பு குளிர்சாதன பெட்டி கட்ணம் ரூ. 950/-

பேருந்து கட்டணம் ரூ. 80/-

இழை நிகழ் செலவு – தகுதிக்குட்பட்டு.